## B.A; TAMIL – 7BTA1C1

முதன்மைப் பாடம் தாள் 1 - இக்கால இலக்கியம்

அலகு – 1 : பாரதியார் கண்ணன் பாட்டு – கண்ணம்மா என் குழந்தை.

பராசக்தியைக் குழந்தையாகக் கண்டு சொல்லிய பாட்டு.

பாரதியார் குழந்தை செல்வத்தின் அழகையும் அதன் சிறப்பையும், அது துன்பப்படும் போது பரிதவிக்கும் தாயின் இயல்பையும் பற்றிப் பாடுகிறார்.

.

### கண்ணம்மாஎன் குழந்தை-

### மழலைச் செல்வத்தின் சிறப்பு

**பாடல் எண்.1**

**பொருள் :அழகிய சின்னஞ்சிறு கிளிகளைப் போன்றவள் என் கண்ணம்மா . குழந்தைதான் உயர்ந்த செல்வம் .எனவே பெருஞ்செல்வமான என் இல்லத்திற்கு வந்தவள் என் கண்ணம்மா .குழந்தை வேண்டும் என்கிற ஏக்கம் தீர்த்து மலடி என்று ஊரார் இகழாமல் பெருமைப்படும் வகையில் எனக்கான குழந்தையாக வந்தவள் அவள் .**

### மழலைச் செல்வத்தின் அழகு

**பாடல் எண் .2**

**பொருள் :இனிய கனியின் சுவை போன்றவள் அழகிய பேசும் ஓவியம் . ஓவியம் அனைவரும் விரும்பும் .கண்ணம்மா நீ தான் ,போன்றவளும் அது பேசும் திறனும் ,அதிலும் பொன் ஓவியம் மேலும் .கலைகளுள் ஒன்று இனிய .கொண்டது என்று குழந்தையின் பெருமையை உயர்த்துகின்றாய் தேன்போன்ற நீ ஆடி அசைந்து நடந்து வருகையில் உன்னை அள்ளி எடுத்து அணைத்திட வேண்டும் என்று என் உள்ளம் தவிக்கின்றது.**

**பாடல் எண் 3 .**

**பொருள் :நீ ஓடி வரும் அழகினைக் கண்ட என் மனம் மிகுந்த மகிழ்ச்சியில் குளிர்கிறது ஓடி விளையாடுகின்ற காட்சிகளை ,நீ இங்கும் அங்குமாக ஆடி . .காண்கிறபோதும் உன்னை ஆரத்தழுவி நிற்கிறேன் நான்**

**பாடல் எண்4 .**

**பொருள் :உன்னைக் கட்டி அணைத்து மகிழ்கின்ற வேளையில் உன் உச்சந் தலையில் முத்தமிட்டால் என்னுடைய இன்பம் மிகுதியானதால் எனக்குள் ஒரு கர்வமும் வளர்கிறது இதற்குக் காரணம் உன்னைப் போன்ற . அழகியப்பிள்ளை எனக்கு மட்டுமே கிடைத்திருக்கும் இவ்வுலகில் என்ற மேலும் உன் அறிவுத்திறன் கண்டும் .எண்ணமே ஆகும்உன்னுடைய அழகைக் கண்டும் ஊர் மக்கள் புகழ்ந்து பேசும் வார்த்தைகளைக் கேட்கிற போதும் என்னுடைய மேனி சிலிர்க்கின்றது**

**பாடல் எண்5 .**

பொருள்: உன்னுடைய கன்னத்தில் முத்தமிடுகின்றபோது மனதில் ஏற்படும் இன்பம் கள் அருந்தியவரின் இன்ப மயக்கத்தை போன்று உள்ளது. உன்னை தழுவிடும் போது நான் அன்புநிலை முற்றி பைத்தியம் போன்றே ஆகி விடுகிறேன்.

மழலையின் வாட்டம் கண்டால் பரித்தவிக்கும் தாயின் இயல்பு

பாடல் எண் .6

பொருள் ;உன் முகம் சிவந்திருந்தாலும் என்னுடைய மனம் அதனைக் கண்டு கவலைக்கொள்கின்றது எதையாவது எண்ணி நீ நெற்றியில் சுருக்கமிட்டு . .சிந்தித்தால் என் மனம் பதறுகின்றது

பாடல் எண் .7

பொருள்: உன் கண்களில் கண்ணீர் வருவதனைப் பார்த்தாலோ என் நெஞ்சில் இரத்தமே வடிகின்றது. என் பார்வைக்குக் காரணமான கண்ணின் பாவையானவளே நீதான் கண்ணம்மா என்னுடைய உயிரும் உன்னுடையதுதான்.

குழந்தை பேசும் மழலை மொழி தரும் இன்பம்

பாடல் எண் .8 .

பொருள் :உன்னுடைய மழலைச்சொல் கேட்கின்றபோது என்னுடைய துன்பங்கள் தீர்ந்துவிடுகின்றது )வள்ளுர் குழினிது யாழினிது என்று கூறுபவர் தன்னுடைய குழந்தையின் மழலைச்சொற்களைக் கேட்டு மகிழாதவர்கள் என்று கூறுகிறார் (உன்னுடைய முல்லை விரித்ததுப்போன்ற சிரிப்பை என்னுடைய பெருத்தக்கோபத்தையும் தவிர்த்துவிடுகின்றது.

பாடல் எண் 9 .

குழந்தைச் செல்வத்திற்கு நிகர் ஏதும் இல்லை

பொருள் :உன் இனிய மொழியில் நீ பேசும் வார்த்தைகள் கதைகள் எனக்குத் தரும் இன்பங்களை எந்த நூல்களாலும் நான் படித்து இன்புற முடியாது குழந்தையும் . தெய்வமும் ஒன்று என்பதால் உன்னுடைய அன்பில் தெய்வம் கூட உனக்கு நிகர் ஆக முடியாது என்பதனையும் நான் உணர்கின்றேன்

பாடல் எண்10 .

பொருள்: நான் மார்பில் பல்வேறு விதமான அணிகலன்களை அணிந்தாலும் உயர்ந்த வைரத்தைவிடவும் சிறந்த மணியான அணியாக என் மார்பை அலங்கரித்து மகிழ்ந்தவள் நீதான், உனக்கு நிகர் யாரும் ஆக முடியாது நான் வாழ்வில் பெருமையும் சிறப்பும் பெற்று நான் வாழ்வதற்கு கிடைத்த மிகப்பெரும் செல்வம் உன்னைத்தவி எனக்கு வேறு ஏதும் இல்லை.

பாரதிதாசன் - அழகின் சிரிப்பு – புறாக்கள்

பாரதிதாசன் புறாக் கூட்டின் சிறப்பு, புறாக்களின்

நிறம், அவற்றிடம் காணும் ஒற்றுமை, நடையழகு, ஒழுக்கம் அன்பு இவற்றைப் பற்றி பாடுகிறார்.

## அழகின் சிரிப்பு

**முதல் பாடல் பொருள்**

**வேலன் என்பவன் தன் வீட்டின் வெளிப்புறத்தில் ஒரு கூண்டு கட்டி அதில் புறாக்களை வளர்த்து வந்தான். வேலன் வந்து புறாவின் கூட்டினைத் திறக்கும் முன்பு " குடு குடு " எனப் புறாக்கள் குதிக்கும் சத்தம் காதில் கேட்டது.**

**வேலன் வந்து கூட்டினைத் திறந்ததும், கீலே சரிந்த கோட்டுப்பூப்போல புறாக்கள் கூட்டிலிருந்து குதித்தன.**

**கோட்டுப்பூ - கிளையில் மலரும் ஒருவகைப்பூ**

**இரண்டாவது பாடல் பொருள்**

**நிலா போன்று வெண்மை நிறத்தில் இருக்கும் இரு புறாக்கள் ஒன்று கூடி இரையை உண்ணும்.**

**வெண்மையான இதழ்கள் விரியாத தாமரை போல் இரு புறாக்கள் ஒன்று கூடி நிற்கும்.பெண்களின் கருமையான கொண்டை போல ஓர் இணை, ஈயக்கட்டி, காயாம்பூக் கொத்து போன்று ஒர் இணை. மேலும் ஒரு பக்கம்வாழைப்பூ வண்ணத்தில் இரு புறாக்கள் இருக்கின்றன. இவையெல்லாம் உயிருள்ள அழகின் மேய்ச்சலாகும்.**

**மூன்றாவது பாட.ல் பொருள்**

**நீரில் இருக்கும் தாமரை மலர் ஒன்று தன் இதழ்களை அழகாக விரித்திருப்பது போல் புறாக்கள் கூட்டமாய்க் கூடி இரையை உண்ணும்அந்தப்பூக்களின் வாழ்வில் வெட்டில்லை, குத்துமில்லை, தனித்தனியாக இருந்து உண்ணும் வேற்றுமை இல்லை. உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்னும் கண்மூடி வழக்கம் இல்லை**

**மனிதர்களிடம் இருக்கின்ற வேறுபாடுகளைப் போன்று பறவைகளிடம் இல்லை. அவை எப்பொழுதும் ஒற்றுமையாக இருக்கின்றன என்பதுகருத்து**

**கண்மூடி வழக்கம் -மூடப்பழக்க வழக்கம்**

**நான்காவது பாடல் பொருள்**

**அகன்ற வாய்ச் சட்டி ஒன்றின் முனையில் புறா ஒன்று தன் அடி பொருத்தி**

தலையை நுழைக்கிறது.அந்தப் புறா வாய்நிறைய நீர் மொண்டு நிமிர்ந்திடும் பொன்னான அதன் இமைகள் சிரிக்கும் அதனுடைய மணிபோன்ற கண்கள் நாலா திசைகளிலும் பார்க்கும் கீழே இறங்கி மகிழ்ச்சியாக உலாவி உலகை ஆளும் அரசர்க்கு நடை கற்பிக்கும்

நாற்பாங்கும் -நாலா திசைகளிலும்

ஐந்தாவது பாடல் பொருள்

ஒரு பெண் புறா தன் ஆண் புறா அன்றி மற்றொன்றுடன் கூடாதாம்.ஒரு பெண் பறா மத்தாப்பைப் போல் ஒளி வீசிட நின்றாலும் மற்றொரு ஆண் புறா அதைத் திரும்பியும் பார்ப்பது இல்லை, தம்முடைய ஒரு புறா இறந்தால்தான் ஒரு புறா மற்றொன்றை நாடுமாம்.

“ ஒருவனுக்கு ஒருத்தி “ என்ற பண்பாடு புறா இனத்தில் சிறப்பாக கடைப்பிடிக்கிறது என்கிறார் பாவேந்தர்.

ஆறாவது பாடல் பொருள்

அவள் தனியாக இருக்கிறாள் யாருடனும் கூட விருப்பமில்லை. ஆனால்அவளோ அந்தப் பெண் வருந்தும்படி வேறொரு பெண்ணைக்கூடிதவறு இழைக்கிறான்

ஏழாவது பாடல் பொருள்

இது ஒரு தகாத செயல், இந்தச் செயல் புறாக்கள் இனத்தில் இல்லை,புறாக்களில் ஒரு சில தறுதலைகள் கவலையுடன் இருக்கும் மக்களிடம் கற்றுக்கொண்டிருக்கலாம்.

தறுதலைகள் -விதிவிலக்காக இருக்கும் சில புறாக்கள்

எட்டாவது பாடல் பொருள்

தலையைத் தாழ்த்தி, குடு குடு என்று தன்னைச் சுற்றி வரும் ஆண் புறாவை ஒரு பெண் புறா தன் கொலை பாய்ச்சும் கண்ணால் தானே குறுக்கில் சென்று திரும்பி,தன் தலையை ஆட்டி,தரையைக்காட்டி இங்குவா என்று அழைக்கும்

மலையைக்காட்டி அழைத்தாலும் தான் காதல் மயக்கம் பெற்றவர்கள் செல்லமறுப்பாறோ?

மையல் -காதல் மயக்கம்

**தாய்ப் புறா, இரை தின்ற பின்பு தன் குஞ்சைக்கூட்டில் கண்டு தன் வாயினைத் திறக்கும்.குஞ்சு தன் மூக்கைத் தாய் வாய்க்குள் வைக்கும்**

**தாய்ப் புறா, தான் உண்ட இரையைக் கக்கித் தன் குஞ்சின் குடலை ஒன்பதாவது பாடல் பொருள்**

**நிரப்பும்.தாய் ஊட்டி முடித்ததும் அடுத்து தந்தைப் புறா ஊட்டும்**

**பத்தாவது பாடல் பொருள்**

**மயிற் புறா தன் சிறகை விரிக்கும்.தன் மார்பை முன்னே உயர்த்தும்.தன் கழுத்தை முன்னே நீட்டி நன்றாக நிமிர்ந்து.பரதநாட்டிய நூலின்படி அடைவு போடும்**

**அப்பொழுது மயிற் புறா வெண்சங்கு போல் இருக்கும் அதனுடைய வாலானது தந்தத்தால் ஆன விசிரி போன்றிருக்கும்**

**பதினோறாவது பாடல் பொருள்**

**சுழற்றிய கூர்மையான வாள் போல் புறாக்கள் கூட்டமாய்ப் பறந்து போகும்கொத்தடிமைகள் போல் புறாக்களின் கூட்டம்,கூட்டினில் வந்து அடையும். குழைத்து வண்ணம் தீட்டிய ஓவியத்தைத் திரையிட்டு மறைப்பதைப் போன்று.புறாக்கள் அடைபட்ட கூட்டினை வேலன் வந்து சாத்தினான்**

கண்ணதாசன் - மாங்கனி

சேரன் செங்குட்டுவன் வடக்கே கனக விசயர்களை வென்று, அவர்கள் தலைமையில் கண்ணகிக்குக் கல்கொண்டு வந்து வஞ்சி மாநகரில் விழா எடுக்கிறான்.

சேரன் அவையில் மாங்கனி என்ற கணிகை குலப்பெண் மீது அடலேறு காதல் கொள்ளுதல், அடலேற்றின் படையெடுப்பு, போர் வெற்றி, அடலேற்றின் செயல்கள், அடலேற்றின் பகையும் துன்பமும், அடலேற்றின் திருமணம், மாங்கனியின் வருகை தன் உயிரை மாய்த்துக் கொள்ள வேகமாக ஓடி முடிவாக முடித்தள்ளார்.

---

கல்லக்குடிப் போராட்டம் காரணமாகத் திருச்சி மத்திய சிறையில் இருந்தபோது, (1954-இல் வரலாற்று நிகழ்வுகளை . மாங்கனி எழுப்பட்டது ( அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட ஒரு குறுங்காவிய நாடகம் போன்றது கவிஞர் எழுதிய காவியங்களில் மாபெரும் பாராட்டுப்பெற்றது . தான் மாங்கனி .இதுவெனலாம்

மோரிய மன்னன் அறுகையோடு மோகூர்க் குறுநில மன்னன் பாண்டியன் பழையன் என்பவன் பகைமை கொண்டதாகவும் , அறுகைக்கு உதவியாகச் சேரன் செங்குட்டுவன் பழையன் மீது போர் தொடுத்ததாகவும் காணப்பட்ட ஒரு குறிப்பை வைத்து மாங்கனியைப் புனைந்ததாகக் கவிஞர் கண்ணதாசன் தம் நூலின்

முன்னுரையில் குறிப்பிடுகிறார் மேலும் இக்க ாவியத்தில் அமைச்சராக வரும் அழும்பில் வேளுக்கு ஒரு மகன் இருந்ததாக வரலாற்றில் குறிக்கப்படவில்லை ; ஆனால், கவிஞர் படைத்துள்ளார் அதேபோல ., சேரன் செங்குட்டுவன் படையெடுத்துச் செல்லும் இடங்களுக்கெல்லாம் கணிகையர் சிலரும் அழைத்துச் செல்லப்படுவதுண்டு எனும் வரலாற்றுக் குறிப்பினைக் கொண்டு , அதிலே ஒருத்தியாகக் கவிஞரின் கற்பனையில் பிறந்தவள் தான் இக்காவிய நாயகி மாங்கனி.

தென்னரசி, பொன்னரசி கவிஞர் படைத்த கற்பனைப் பாத்திரங்கள் , காதல் சம்பவங்களை, காவியத்தைச் சுவையாக அமைக்கப் பயன்படுத்தியிருப்பதாகத் தெரிகிறதுமாங்கனியில் அகப்பொரு .ள், புறப்பொருள் எனும் இரண்டு பொருள்கள் பற்றியும் கவிதை புனைந்திருப்பதைக் காணலாம் இலக்கண வரம்பை மீறி . உணர்ச்சி நிரம்பிய நடையுடன் எழுதப்பட்டுள்ள இந்தக் காவியத்தின் ஒரு பகுதி, கவிஞர் நடத்திய தென்றல் எனும் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது பின்னர் . முழுமையாக நூல்வடிவம் பெற்றது .'கண்ணதாசன் கவிதைகள் ' முதல் தொகுதியில் மாங்கனி' இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆசிரியர் கண்ணதாசன் -

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவரான கவியரசு கண்ணதாசன், 24-06-1927-இல் சிறுகூடல்பட்டியில் பிறந்தார் தந்தை .சாத்தப்பன், தாய் விசாலாட்சி என்பவர் கண்ணதாசன் இளமையிலேயே கவிபுனையும் . .ஆற்றல் பெற்றவர்1944-இல் ஏப்ரல் 14-இல் இவரது முதல் கவிதை அச்சாகியது . 1948இல் சேலம் மாடர்ன் தியேட்டரில் பணி செய்தார் அறிஞர் அண்ணாவின் . பேச்சுகளால் கவரப்பட்டு1949-இல் தி வில் நுழைந்-க.மு.தார் சுமார் பத்து . பின்னர்த் . வின் கருத்துகளைத் தம் எழுத்துகளில் வடித்தார்-க.மு. ஆண்டுகள் தி தமிழ்த் தேசியக் கட்சியின் மூலமாக இந்தியத் தேசியக் காங்கிரசில் நுழைந்து, அதன் கொள்கைகளைத் தமது கவிதைகளில் வெளியிட்டார் தமது .17-ஆம் வயதில் 'திருமகள்' இதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்று நடத்தினார்.

தென்றல், திரை ஒளி , மேதாவி, கண்ணதாசன், சண்டமாருதம், கடிதம் முதலான இதழ்களில் எழுதி வந்தார் பாரதியார் ., பாரதிதாசன் ஆகியவர்களைப் பின்பற்றி எழுதியவர்; அதே போல , அருணகிரிநாதர், பட்டினத்தார் முதலியவர்களின் பக்திப் பாதையையும் பின்பற்றி எழுதியவர் .1970இல் அனைத்திந்திய சிறந்த கவிஞர் பட்டம் பெற்றவர் .1977இல் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர் இவ்வாறு பக்திக் . கவிஞர்களைப் போலவும் சமூகக் கவிஞர்களைப் போலவும் சித்தர்களைப் போலவும் தம் கவிதைகளில் கருத்துகளை வெளிப்படுத்தியவர் கண்ணதாசன் கண்ணதாசன் கவிதைகள் மனம் போல் வாழ்வு (இரண்டு தொகுதிகள்), வனவாசம், அதைவிட ரகசியம் , தெய்வ தரிசனம் , இலக்கியத்தில் காதல் , அர்த்தமுள்ள இந்து மதம், ஆட்டனத்தி ஆதிமந்தி , ஞானமாலிகா, ராகமாலிகா, இயேசுகாவியம், மாங்கனி, தைப்பாவை, வேலாங்குடித் திருவிழா என இவரது படைப்புகள் நீண்டு கொண்டே செல்லும் இது தவிர ., 'முத்தையா' எனும் இயற்பெயரில் பல கடிதங்களையும் எழுதியுள்ளார் இவ்வாறு ., திராவிட இயக்கக் கவிஞராக

அறிமுகமாகி, திரை இசைக் கவிஞராக உலா வந்து , பின்னர், மதநம்பிக்கையாளராக மாறி, மானுடச் சாதியின் மகத்துவத்தை உலகறியச் செய்த ஒப்பற்ற கவிஞராகத் திகழ்ந்தவர் தான் கவியரசு கண்ணதாசன் .1981-அக்டோபர் 17-இல் கவிஞர் அமரரானார் ஆனாலும் ., அவரது கவிதைகள் நம் இதயங்களில் நீங்கா இடம் பெற்ற கவிதைகளாக உலா வருகின்றன என்பதே உண்மை .

## கதைச் சுருக்கம்

சேரன் செங்குட்டுவன் வடக்கே கனக விசயர்களை வென்று , அவர்கள் தலையில் கண்ணகிக்குக் கல்கொண்டு வந்து வஞ்சிமாநகரில் விழா எடுக்கிறான்.

### அடலேற்றின் காதல்

அந்த வேளையில் சேரன் அவையில் மாங்கனி என்ற கணிகை குலப்பெண் யாவரையும் கவரும் விதத்தில் நடனமாடினாள் அப்போது ., அங்கிருந்த அமைச்சர் அழும்பில்வேள் மகன் அடலேறு , அவள் அழகைக் கண்டு மயங்கிக் காதல் கொள்கிறான் தன் மாளிகையில் மாங்கனியை நினைத்தவாறே உட்கார்ந்திருந்த . அடலேறுவிடம், மோகூர் மன்னன் பழையனுக்கு எதிராகப் போர்தொடுக்கும் செய்தியைச் சொல்கிறான் அமைச்சரும் அவன் தந்தையுமான அழும்பில்வேள் ., போருக்குச் செல்லும் எண்ணம் ஒரு பக்கமிருந்தாலும் , அந்த இரவில் தனியாக இருக்கும் மாங்கனியிடம் தன் காதலை வெளிப்படுத்துகிறான் அடலேறுமாங்கனி . ஆனாலும் . அவனைத் திட்டியும் பழித்தும் பேசி மறுத்துவிடுகிறாள், அடலேற்றின் பண்பினையும் பெருந்தன்மையையும் நினைத்து அவனிடம் மனத்தைப் பறிகொடுத்தவளாகவே காணப்படுகிறாள்.

### அடலேற்றின் படையெடுப்பு

அடலேற்றின் தலைமையில் சேரர் படை மோகூருக்குச் செல்கிறது ஆடல் ., பாடல்களுக்காக மாங்கனியும் அவளுடன் ஐந்து பெண்களும் செல்கின்றனர் . .மோகூரின் வடக்குப் பகுதியில் தனித்தனியாகக் கூடம் அமைத்துத் தங்குகின்றனர் அன்று நள்ளிரவில் அடலேறு மாங்கனியைச் சந்தித்துப் பேசித் தனது கூடாரத்தை அடைகின்றான் அவ்வேளையில் மோகூர் மன்னன் தன் படைத்தலைவனான . மலைமேனி சேரர் படைகளைப் .மலைமேனியை உளவறிந்துமாறு அனுப்புகிறான் . அதனருகில் மாங்கனியையும் மற்ற பெண்களையும் பார்க்கிறான் .பார்க்கிறான் பார்த்த மாத்திரத்திலே மாங்கனியையும் மற்ற பெண்களையும் மலைமேனியின் ஆட்கள் காட்டிற்குத் தூக்கிச் சென்று விடுகிறார்கள்.

### போர் வெற்றி

சேரர் படை வீரர்கள் பல படைகளைக் கடந்து பகைவர்களை அழித்து , மோகூருக்குள் நுழைந்து, வெற்றி பெற்றுப் பெருமகிழ்ச்சியோடு அரண்மனைக்குள் நுழைய, நான் சரணம் ' எனக்கூறிப் பழையன் பணிந்தான் அவன் பெ .ண் மக்கள் இருவரும் கண்களில் நீர் சொரிய ஆங்கே வந்து நின்றனர் மூவரையும் . படைத்தலைவன் தளிவேல் சிறைப்படுத்தினான்

### அடலேற்றின் செயல்கள்

மோகூர் நாட்டைக் கைப்பற்றிய பெருமிதத்துடன் அந்த நகரை வலம் வந்தான் அடலேறு அப்போது கட்டுப்பாடற்ற சில சேர வீரர்கள் அக்கிரமச் செயல .்கள் செய்வதைப் பார்த்துக் கண்டித்தான் அடலேறு தளிவேல் என்பவன் பழையன் . தென்னரசி மட்டும் அவனை .மகள் பொன்னரசியின் கூந்தலை அறுத்துவிடுகிறான் அந்த நேரத்தில் அங்கு வந்த அடலேறு . எதிர்த்து நின்றாள், தளிவேலைக் கண்டித்து, அவனது வீரப்பதக்கங்களைப் பறித்தான்.

பின்னர், பழையன் மற்றும் மக்கள் இருவரையும் விடுவித்து அவர்களைத் தேற்றுகிறான்உடனே ., பழையன் அடலேற்றை விருந்திற்கு அழைக்கிறான் . அப்போது பழையன் மகளிர் . அடலேறு அவ்விருந்தில் கலந்து கொள்கிறான் முக்கனியைக் கொண்டு வந்து படைக்கும் நேரத்தில், மாங்கனியைத் தொட்டு எடுக்கும் நேரத்தில் , காட்டு வெளியில் தங்கவைத்துவிட்டு வந்த தன் காதலி மாங்கனி நினைவுக்கு வர விரைவாகப் புறப்பட்டுப் போய்விடுகிறான் அவனது . செயலை நினைத்துப் பழையனும் அவனது மகளிரும் மிகவும் .வருத்தமுறுகிறார்கள்

## அடலேற்றின் பகையும் துன்பமும்

மாங்கனியைக் காணாதவனாக அடலேறு மிகவும் அழுது புலம்புகிறான் ஒன்றும் . இந்நிலையில் . செய்வதறியாது திகைப்புற்று நிற்கிறான்'தளிவேல்' அடலேறுவிற்குப் பகைவனாக மாறிவிடுகிறான் மாங்கனியை ., சூரபதன் என்பவனுக்கு விற்றுவிடுகிறான் மாங்கனியைச் சூரபதன் காவலுக்குட்படுத்திக் . இச்சூழ . கொடுமைகள் பல நிகழ்த்துகிறான்்நிலையில், வெற்றிப் பெருமிதம் ஒருபக்கம் இருந்தாலும் , தன் காதலியைத் தொலைத்த சோகத்துடன் அடலேறு சேரநாடு திரும்புகிறான்.

## அடலேற்றின் திருமணம்

சில நாள்கள் கழித்து , பழையனிடமிருந்து தன் மகள் தென்னரசியைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டி ஓலை வருகின்றது மன்னன் .விருப்பப்படியும் தன் தந்தையின் கட்டளையின் பேரிலும் திருமணத்திற்குச் சம்மதித்து அடலேறு மணம் புரிகிறான்.

## மாங்கனியின் வருகை

பல இன்னல்களிடையேயும் தன் காதலனை மனத்தில் நிறுத்தி நாடி வருகிறாள் மாங்கனி அடலேறுவிற்குத் திருமணம் நடந்து . சேர நாடு வந்தடைகிறாள் . முடிந்தாவிடுகிறது . ஆறாத்துயரில் மூழ்குகிறாள் .கேள்விப்படுகிறாள் . அங்கு . தென்னரசியும் அடலேறுவும் இருக்கும் அறையின் அருகில் செல்கின்றாள் இருவரும் ஒன்றிப்போய் பேசி மகிழ்வதைப் பார்த்து, 'அத்தான்' என்றாள் மாங்கனி . என்று வெ !மாங்கனி ! அந்தக் குரலைக் கேட்ட அடலேறு மாங்கனிளியே ஓடிவருகிறான்.

## துன்பமுடிவு

மாங்கனி அங்கு நிற்காமல் துயரத்தோடு ஓடி , சுழன்று வரும் ஆற்றில் விழுகிறாள் அவளைக் காப்பாற்ற அடலேறும் விழ ., அவ்விருவரையும் காப்பதற்காகத் தென்னரசியும் விழுந்து விடுகிறாள் இப்படி மூவரும் ஆற்றில் . இக்கதை .மூழ்கி இறந்து விடுகின்றனர்யே மாங்கனி காப்பியம்.

## கதைமாந்தர்

---

மாங்கனி காப்பியத்தின் தலைமை மாந்தர்களாகக் காணப்படுபவர்கள் அடலேறுவும் மாங்கனியும் அவர்கள் இருவரின் காதல் உணர்வை இக்காப்பியம் . .வெளிப்படுத்துகிறது

### அடலேறு

மாங்கனி காவியத்தின் தலைவனாக 'அடலேறு' படைக்கப்பட்டிருக்கின்றான் . தன்னேரில்லாத் தலைவனாகவே காணப்படுகிறான் காவியத்தின் பெரும்பகுதி . . காதல் வயப்பட்ட ஒரு குணாதிசயப் படைப்பாகவே அடலேறு காணப்படுகிறான் ஆடல் அழகி மாங்கனியைப் பார்த்து, அடலேறு அடைந்த நிலையினை,

செழுங்கொடியைக் கண்வாங்கி மனத்துட் போட்டு
சீரணிக்கமுடியாமல் நின்றான் ஆங்கே!

என்று எழுதுகிறார் கவிஞர் கண்ணதாசன்.

அடலேறுவின் காதல்

மாங்கனி வந்து அவையில் ஆடற்கலை நிகழ்த்திவிட்டுச் செல்கிறாள் அப்படிச் . மாங்கனி சென்று மறைகிறாள் . செல்பவளின் பின்னாலே போகிறான் அடலேறு; ஆனாலும் அவள் சென்ற இடத்தையே பார்த்துப் பார்த்து ஏக்கம் கொண்டவனாக , அவளது பாதத்தின் தடயத்தைப் பார்த்து மகிழ்பவனாகக் காணப்படுகிறான் அடலேறு:

போனவளின் பின்னாலே மெல்லப் போனான் !
புதுமனதின் முதல் கூச்சம் இழுக்கக் கண்டு
சித்திரத்தாள் அடிச்சுவட்டைத் தேடிப்பார்த்தான்
தென்றலது போனதற்குச் சுவடு ஏது ?
கைத்திறத்தால் தரை தடவிப் பார்த்து அன்னாள்
கால்பட்ட இடத்தில் இளஞ் சூடு கண்டான்!

என்று அடலேறுவின் காதல் செயல்பாட்டினை அழகுபட எடுத்துரைக்கிறார் கவிஞர்.

பித்துமனம் நிலையழியப் பெருமூச் சோடு
பேரரசைத் தோற்கடித்த வாளைப் பார்த்தான் !
குத்திடுவேல் வாளெல்லாம் களத்திலேதான் ;
கோதையர்பால் துரும்பேதான்

என்று தன்னுடைய வாள்வீரத்தையும் தோள்வீரத்தையும் காதல் போர்க்களத்தில் தோற்றுவிடுவனவாகப் பேசுவதைக் காண்கிறோம்.

விழியிருக்கும் ஒளியின்றி , விரிந்த நெஞ்சு
வெளியிருக்கும் நினைவின்றி , வாய் வடித்து

மொழிபிறக்கும் தொடர்பின்றிக் காதல் ஒன்றே
மூண்டிருக்கும் உருவானான் அமைச்சன் மைந்தன்!
என்று காதல்வயப்பட்டவனின் நிலையினைப் பேசுகிறார் கவிஞர்.
மரம்பழாத
பழந்தின்னும் நினைவான அடலேறங்கே
பசியாற முடியாமல் சோலை புக்கான் !
மரத்தோடு மரமாக நின்றான் ; தந்தை
வலுவோடு அழைத்திட்ட குரலுங்களோன் ;
சிரத்தூடு மலர்பட்டுச் 'சில்' லென்றேறி
சிலையாக்க, மூச்சின்றி நின்றான் மைந்தன்!
என்று, தன் சிந்தனையில் மாங்கனியைத் தவிர , மற்ற செயல்பாடுகளையெல்லாம் மறந்தவனாகக் காட்சியளிக்கிறான்.

கோபமும் பண்பும்

நள்ளிரவு நேரத்தில் மாங்கனியைச் சந்தித்துத் தனது காதலை வெளிப்படுத்த நினைத்துச் செல்கிறான்ஆனால் ., அதைப் புரிந்து கொள்ளாத மாங்கனி அவனைக் கோபத்துடன் திட்டி விடுகிறாள் அடலேறு அப்போதும் அவளிடம் கோபம் . கொள்ளாமல், மன்னிப்புக் கேட்கும் ஒரு மாண்பாளனாகக் காணப்படுகிறான்.
மாங்கனிக்குத் தன் மேல் கோபம் வரவழைத்துவிட்டேனே என்று ஏக்கத்துடன் தன்னுடைய படுக்கை அறைக்குள் சென்ற செயலினை,
பாறைக்கல் பள்ளத்தில் விழுந்தாற்போலப்
படுக்கையில் அடலேறு வந்து வீழ்ந்தான்
என்று அடலேறுவின் நிலை பேசப்பட்டுள்ளது.
காதலியின் மூலமாகவே காதலனின் பண்பு நலன்கள் பற்றிப் பேசவைப்பதில் கவியரசு கண்ணதாசன் கைதேர்ந்தவர்.
ஆணழகன்அவனியெல்லாம் !சிங்காரன் !
அடக்கிவைத்த மாவீரன் !அறிவுத்தோட்டம் !
தேன்பொழியும் கருணைமனம் வடகோ டன்னத் !
திரண்டிருக்கும் உயர்தோளன் அழியாச் செல்வம் !
மானமிகும் மறக்குலத்தான் என்றாள்!
என்று ஒரு தமிழ் மன்னனின் பெருமைகளைப் பேசுவதைப் போல அடலேறுவின் பண்பு நலன்களைக் குறிப்பிடுகிறார் கவிஞர்.
அடங்காத பொலிகாளை உருவம் போலும்
அடலேறு செல்கின்றான் தலைமை தாங்கி
என்று வீரம் செறிந்த ஒரு காவியத் தலைவனாகக் காணப்படுகிறான் மேலும் ., பெண்களைக் கொடுமைப்படுத்தும் தன் நாட்டு வீரர்களைக் கண்டிப்பவனாகவும் மாங்கனியைக் காணாதவனாக அழுது துடித்துப் புலம்புபவனாகவும் அடலேறு விளங்குகிறான்.
ஒளியிழந்த வானத்தின் மேனி போல
தூக்கத்தில் நடப்பது போலவும் நடந்து செல்கிறான்-

மாங்கனியைக் காணாத அடலேறுவின் நிலையினைக் கவியரசு இவ்வாறு பேசுகிறார்இறுதிவரை ., காதலுக்காகவே வாழ்ந்து தனது இன்னுயிரைத் தியாகம் செய்பவனாகவே காவியத்தில் அடலேறு படைக்கப்பட்டிருக்கிறான்.

**மாங்கனி**

தன்னேரில்லாத தலைவன் போலவே இளமையும் , அழகும் நாணும் பொற்பும் பெற்ற தலைவி காவிய நாயகி மாங்கனி ஆடல் ., பாடல், அழகு சிறந்த கலை மடந்தை.

மின்வெட்டுக் கண்கட்ட மேவினாற்போல்
மென்பட்டுப் பூங்குழலி பூமிதொட்டுப்
பொன்கட்டிச் சிலைபோல ஊர்ந்து வந்தாள்.

என்று மாங்கனியைக் கவிஞர் அறிமுகம் செய்கிறார்.

**மாங்கனியின் அழகு**

கவியரசரின் கற்பனையில் பிறந்த பரத்தையர் குலப் பெண்தான் மாங்கனி . உயர்ந்த ஒழுக்கம் கொண்ட, ஆடல் அழகு வாய்ந்த பெண்ணாகப் படைக்கப்பட்டிருக்கிறாள்.

கொலைவாளுக்கு உறைபோல விழிவாளுக்கு இமை
சிலையோடும் சமமாக விளையாடும் புருவம்
சிறுவானப் பிறைமீது அலைமோதும் அழகு

என்று சேரமன்னனின் அவைக்களப் புலவன் மூலமாக மாங்கனியின் அழகு பேசப்படுகிறது.

விரிக்காத தோகைமயில் வண்டுவந்து !
மடக்காத வெள்ளைமலர் நிலவு கண்டு !
சிரிக்காத அல்லிமுகம் செகத்தில் யாரும் !
தீண்டாத இளமை நலம்; பருவஞானம்!

என்று சேரமன்னன் மாங்கனியைப் பற்றியும் அவளது இளமை அழகையும் பற்றிப் பேசுவதாகக் காணமுடிகிறது.

இவ்வாறு அனைவராலும் மாங்கனியின் அழகு நலன்கள் பேசப்படுவதைக் காணலாம்.

## தாயின் வற்புறுத்தலும் மகளின் மறுப்பும்

மாங்கனி தன்னைப்போலவே நடனமாதாக இருந்துவிடக் கூடாது என்பதால் , தன்குலத்து ஆடவன் ஒருவனை மணக்க வற்புறுத்துகிறாள் அவள் தாய் ஆனால் ., தனக்குப் பிடிக்காத ஒருவனை எப்படி மணப்பது என்று மாங்கனி தன் தாயைப் பார்த்துக் கேட்கிறாள்.

கற்சிலையோ அம்மா நான் ; கயவன் அந்தக்
காமுகனுக் கென் நெஞ்சத்தைத் தத்தம் செய்ய ?
பொற்கிளியை வானரத்தின் மடியில் போடப்
பொருந்தியதோ உன்னுள்ளம் போதும் போதும்

என்று, தான் விரும்பாத ஆடவனை வற்புறுத்தி மணக்கச் செய்யும் போக்கினைக் கண்டிப்பதை, மாங்கனி மூலம் வெளிப்படுத்துகிறார் கண்ணதாசன்.

## காதலும் கண்டிப்பும்

தன்மேல் காதல் கொண்ட அடலேறு, இரவில் தனியாக இருக்கும் தன்னிடம் வந்து காதலைத் தெரிவிக்க வரும் நேரத்தில், அவனைப் பார்த்து

திறந்திருந்த வீட்டிற்குள் ஓசையின்றித்
திருடனைப்போல் நுழைந்தீரே தென்னர்தானா !?
மானத்தை இக் கோதை மறவாள்!போம்!போம் !

என்று, உள்மனத்தில் அவனைக் காதலித்தாலும், திட்டிப் பழித்துப் பேசி அனுப்பிவிடுபவளாகக் காணப்படுகிறாள்.

நள்ளிரவு இளம்பெண்தூங்கும் !தாசிமனை !
நறு மலர்ப் பஞ்சணையருகோர் காளைவந்து
மெல்லமுகந் தொடுவதுதான் உங்கள் ஏட்டில்
வீரர்கள் பெண்கேட்க வரும் செய்தியா?

என்று, தான் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டுப் பெண் கேட்கவே வந்தேன் என்று சொன்ன அடலேறுவைப் பார்த்துக் கோபப்படுகிறாள் கள்ளமனத்தோடு " . எம்குலமக்கள் வாழ்ந்தது பழையகாலம் இப்போதில்லை என்பதை மறந்துவிட்டீர்களா?" என்று தன் குடும்ப , குலத்தொழிலின் இழிநிலையை உடைத் தெறிபவளாகக் காணப்படுகிறாள் மாங்கனி அதே நேரத்தில் அடலேறு நடந்து . கொண்ட பெருந்தன்மையினை நினைத்து அவன் ம்ீது காதல் கொள்பவளாகவும் இருக்கிறாள்.

## போராட்டமும் முடிவும்

மலைமேனி எனும் கொடூரன் தன்னை மானபங்கம் செய்ய முயற்சி செய்த போது , அவனை எதிர்த்து , போராடி, வீழ்த்தித் தப்பித்து ஓடிவரும் பெண்ணாகக் காட்சியளிக்கிறாள் பெண்குலமே காணாத துன்பத்தைக் காதலுக்காகப் . படுபவளாகமாங்கனி படைக்கப்பட்டிருக்கிறாள் தன் காதலன் இன்னொரு . பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான் என்பதை அறிந்த மாங்கனி, தனிமைக்குள் உடல்வேக நிற்கிறாள் தன் உயிரை மாய்த்துக் கொள்ள வேகமாக . . ஓடி மறையும் துன்பப் பாத்திரப்படைப்பாக இறுதியில் படைக்கப்பட்டிருக்கிறாள் இவ்வாறுஆட்டத்தில் தொடங்கி அமைதியில் முடியும் மாங்கனியின் கதை , இணையில்லாச் சேரநாட்டுக் காதல் கதை என்பதை நினைவுறுத்துகின்றது

## இல்வாழ்க்கை நெறி

இல்வாழ்க்கைக்குரிய நெறிகளுள் கற்பின் சிறப்பினையும் , காதலின் உயர்வினையும் எடுத்துரைக்கிறார் கண்ணதாசன்.

### காதல்

மனித வாழ்வில் தோன்றும் உணர்வுகளில் காதல் உணர்வு மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று அழகினால் கவர்ச்சியினால் தொடங்கும் காதலானது . காதல் . காதல் உள்ளத்தைப் பொறுத்து அமைகிறது . உள்ளத்தால் வலுவடைகிறது

பெண் படைப்பின் தீர்வே-ஆண் . இல்லாமல் இவ்வுலகத்தில் இன்பம் நிலவாது காதலாகிறது என்பதைத் தமது கவிதை வரிகளில் நிரூபித்துக் காட்டியவர் கவியரசர் கண்ணதாசன்.

காதலின் உயர்வு

'காதல் செயும் மனைவியே சக்தி கண்டீர்' என்றும், 'காதல் போயின் சாதல்' என்றும் பாரதியார் காதலின் உயர்வை வலியுறுத்திப் பாடினார் .'காதல் அடைதல் உயிரியற்கை' எனப் பாவேந்தர் பாரதிதாசனாரும் பாடினார் இவர்களைப் . காதல் என்பது தேன்கூடு அதைக்" பின்பற்றியே ஆலங்குடி சோமுவும் கட்டுவதென்றால் பெரும்பாடு" எனத் திரைப்படப் பாடலில் வெளிப்படுத்தினார்.

மாங்கனியில் காதல் உணர்வு

தாம் படைத்த மாங்கனி குறுங்காவியம் முழுவதிலும் காதலின் வெளிப்பாடுகளைப் பல நிலைகளில் உணர்த்தியுள்ளார், கண்ணதாசன்.

தலையிருக்கும் பாரத்தை இறக்கி வைக்க
வழியிருக்குஞ் சாலைதனில் , ஆனால் காதல்
குலையிருக்கும் நெஞ்சத்தின் பாரமொன்றும்
குறையா தென்றுஅரற்றினான் கொற்றவீரன் !

என்று, மாங்கனியின் கண் சுழற்சியால் அகப்பட்ட அடலேறுவின் காதல் நிலையினைப் பேசுகிறார் கவிஞர் காதல் வளர்ந்து ., தனிமையில் முதன்முதலில் சந்திக்க முயல்கின்றனர்.

'மாங்கனி ' என்றான் வீரன் ; மாங்கனி காதல் மீறித்
'தாங்குவீர்' என்றாள்தாங்க !, தளிர்க்கொடி சுற்றிக்
கொண்டாள்,
'நீங்கிடேன்' என்றான் மெள்ள

என்று காதலில் அகப்பட்டவர்களின் சந்திப்புப் பற்றிப் பேசுகிறார் கவிஞர் கண்ணதாசன்மேலும் ., காதல் வெள்ளத்தில் சிக்கிச் சிதறுண்டு தத்தளித்த அடலேறுவின் மனத்தை,

பாறைக்கல் பள்ளத்தில் விழுந்தாற்போலப்
படுக்கையில் அடலேறு வந்து வீழ்ந்தான்
சிரத்தூடு மலர்பட்டுச் 'சில்' லென்றேறி
சிலையாக மூச்சின்றி நின்றான் மைந்தன்!

என்று காதல் வயப்பட்ட மனத்தை நம் கண்முன் நிறுத்துகிறார் கவிஞர்.

காதலில் பிரிவு

காதலர்கள் இருவரும் பேச ஆரம்பித்துவிட்டால் , நேரம் ஆனதைப் பற்றிக் கவலையே படமாட்டார்கள் அதே நேரத்தில் பிரிய வேண்டிய கட்டாயமான பகல் . .நேரம் அரும்புகிறதுபிரிய மனமில்லாதவர்களாய் இருக்கின்றனர்.

அடுத்தார் குடித்தார் அகன்றுவிட மனமின்றி
அடுத்தார் குடித்தார் அல்லும் மெல அகன்று
விடியும் வரைக்கும் விலகவிலை , தங்களிரு
மெய்யும் துயில விலை!

என்று மாங்கனி அடலேறு பிரிவின் துன்பத்தைப் பற்றிப் பேசுகிறது காவியம் -

மாங்கனியை விட்டு இறுதியாகப் பிரியப் போகும் அடலேறுவின் நிலையைப் பற்றிப் பேச நினைத்த கவிஞர்,

பேச்சினை முடிக்குமுன்னே
பிறிதொரு முத்தம் வைத்துப்
பெருஞ்சுவை எடுத்துக் கொண்டான்

என்று, 'இனி இதுபோல் சுகம் பெறுதல் முடியாது ' என்பதை இக்கவிதை வரிகளில் நமக்கு முன்னதாகவே உணர்த்துகிறார் இவ்வாறு ., கவிஞர் கண்ணதாசன் மாங்கனி காவியம் முழுவதிலும் காதல் உணர்வை மிகவும் சிறப்பாகக் கவிதைப் படுத்தியிருக்கிறார்.

## கற்பு

மனித வாழ்வில் தோன்றும் உணர்வுகளில் காதல் உணர்வும் குறிப்பிடத்தக்கது . இரு மனங்களுக்கிடையே வேர்விட்டு, கிளைவிட்டு, பூத்துக்குலுங்கிப் பரிபூரண இல்லற வாழ்வைத் தேடி அழைத்துச் செல்லும் அறப்பயணம் அந்த . மாண்பமைந்த இல்லற வாழ்விற்குக்'கற்பே' இருவரும் போற்றிப் பாதுகாக்கும் அணிகலனாகும்இந்த அருங்குணத்தோடு ஆணும் ., பெண்ணும் இல்லற வாழ்வில் இனிதே புகுந்தால் இன்பம் நல்கும்.

மாளிகை செல்வம் வாகன சுகங்கள்
மற்றவை கூடினும் மனையறம் இன்றேல்
பெண்ணின் பிறப்பே பேதமையாகும்

என்று பெண்ணிற்கும்,

ஆயிரம் கல்வி அறிவெனத் தேறினும்
ஆடவன் வாழ்வும் அன்புடை மனைவி
இல்லாதாயின் இல்லா தாகும்

என ஆடவர்க்கும் இல்லற வாழ்வின் மேன்மையைப் போற்றித் தமது பாடல்களில் போதித்தவர் கவிஞர் கண்ணதாசன்.

மாங்கனி காவியத்திலும் 'கற்பு' பற்றிய சிந்தனைகளைப் பல இடங்களில் பரவ விதைத்திருக்கிறார்.

மண்ணான தாசிகுலம் பிறப்பாலன்றி
மடிதொடர்ந்து வரும் என்று நினைக்கலாமோ?

என்று, தனக்குப் பிடிக்காத ஒருவனை மணக்க வற்புறுத்திய தாயின் வற்புறுத்தலை எதிர்த்துப் பேசுகிறாள் மாங்கனி

மாங்கனியின் கற்பு

'தாசிகுலம்' என்பது தொடர்ந்து அனுபவித்துவரும் கொடுமையாக இல்லாமல் , மாற்றிக் காட்டுவோம் என்று போராடத் துடிக்கும் ஒரு பெண்ணின் மனவேதனையில், கற்பொழுக்கத்துடன் மாங்கனியைப் படைக்க நினைத்துள்ளார் கவிஞர் கண்ணதாசன் மாங்கனியின் .மீது காதல் கொண்ட அடலேறு நள்ளிரவில் வீடு தேடி வருகிறான்அந்த நேரத்தில் அவனை எதிர்பார்க்காத மாங்கனி .,

தீங்கு நினை வுற்றீரோ அமைச்சர் பிள்ளை ,
தேவடியாள் குலந்தான்நான்; குணத்தில் அல்ல!

என்று பேசுவதன்மூலம் , கற்பின் சிந்தனையை மாங்கனியின் கோபத்திலும் அதனைப் பற்றிச் சிந்திக்கச் செய்கிறார் கவிஞர்.

தாசிமனை என்று நினைத்து , எந்த நேரத்திலும் சென்று பேசலாம் என்று வருவது வீரர்களுக்கு அழகா ? என்று அடலேறுவைப் பார்த்துக் கோபமாகக் கேட்கிறாள் மாங்கனி.

கள்ளமனம் எம்குலத்தில் பழைய சொத்து
காளையதைக் கொண்டுவரல் நன்றேயல்ல!

என்று, தான் பெண் கேட்கவே வந்தேன் என்று சொன்ன அடலேறுவைப் பார்த்துப் பேசுபவளாகவும் மாங்கனி உருவாக்கப்பட்டிருக்கிறாள்.

அதே நேரத்தில் , அமைச்சர் மகன் படம் எடுக்கும் நாகம் போல் வந்திருந்து தன்னைக் கெடுத்துவிட்டிருந்தால் என்ன செய்திருக்க முடியும் ? நீதி கிடைத்திருக்கும்ஆனால் ., அழிந்துவிடும் கற்பினை யார் தருவார்? என்ற சிந்தனை வரிகளில் தமிழ்நாட்டு வீரர்கள் கற்பின் மேன்மையை உணர்ந்தவர்கள் என்பதையும், பெண்மையைப் போற்றுபவர்கள் என்பதையும் கவிஞரின் கவிதைகள் மூலம் நம்மால் உணர முடிகிறது மோகூர் நாட்டின் மீது போர் . தொடுத்துச் சென்ற அடலேறுவும் மாங்கனியும் , அந்நகரின் எல்லையில் தனித்தனியே கூடாரம் அமைத்துத் தங்குகின்றனர் நள்ளிரவில் மாங்கனியும் . அடலேறுவும் கொள்ளைப் பெருமயக்கத்தில் குடமதுவைக் கிண்ணத்தில் கொட்டிக் குடிப்பதுபோல, பிரிய மனமில்லாமல் பேசிக் கொண்டிருந்தனர் பொழுது . இதனைப் பற் .விடிகிறதுறிச் சொல்கின்ற கவிதை வரிகளில்,

அடுத்தார் குடித்தார் அல்லும் மெல அகன்று
விடியும் வரைக்கும் விலகவிலை தங்களிரு
மெய்யும் துயிலவிலை ஆனாலும் அவ்விரவு !
களங்கப் படவுமிலை! கட்டழகர் தென்னரன்றோ !

என்று காதலிருவரும் கற்புடன் இருந்தனர் என்பதைக் கவிஞர் அழகாக எடுத்தியம்புவதைக் காணலாம் .மாங்கனியும் அடலேறும் மகிழ்ந்து பிரிகின்றனர் . அந்தப் பிரிவை,

அடைந்த நன் மார்பை விட்டுக்
கள்ளியின் நடையில் அந்தக்
களங்கமில் கன்னி சென்றாள்!

என்று மாங்கனியின் கற்பின் சிறப்புப் பேசப்படுகிறது

கற்பின் கனல்

சேரர் படை மோகூரை வளைத்து விடுகிற சூழலில் , கட்டுப்பாடற்ற சில சேர வீரர்கள் கண்டவரைக் கைதொட்டு இழுத்து , அக்கிரமச் செயல்களில் ஈடுபடுகின்றனர்அப்பொழுது ., பாண்டிய நாட்டுப் பெண்கள் சிலர் அந்த வீரர்கள் சிலரை வெட்டுகின்றனர்இதனைப் பற்றிச் சொல்ல நினைத்து ., கவியரசர்,

தட்டுப் பாடானாலும் கற்பை விற்கச்
சம்மதியார் நற்குலத்திற் பிறந்த மக்கள்!

என்று பாண்டிய நாட்டுப் பெண்களின் கற்பின் சிறப்பினைக் குறிப்பிடுகிறார் சேரர் படை பாண்டியனின் மோகூர் எல்லையில் தங்குகிறது அந்தப் படைகளின் . எண்ணிக்கையைப் பற்றி உளவறிய வருகின்றான் பழையனின் படைத்தலைவன்

மலைமேனி என்பவன்அப்பொழுது ., ஆங்கிருந்த மாங்கனி மற்றும் பிற மகளிரைப் பார்த்தவுடன் அட்டூழியங்களைச் செய்கிறான் பல பெண்கள் மயங்கி . மாங்கனியைத் தொட்டு இழுக்க வந்த மலைமேனியின் தலையில் .வீழ்கின்றனர் .ஒரு பலகையால் அடித்து அவனைச் செயல் இழக்கச் செய்கிறாள்

சறுக்காத பாதத்தாள் உயிரே யன்றித்
தடங்கற்பைப் பலிகொள்ள இசையா ளானாள்

என்று மாங்கனியின் கற்புத்திறம் கவிஞரால் பேசப்படுகிறது

கற்பின் செல்வி

மலைமேனியை வீழ்த்திவிட்டுப் போராடிப் பிறகு தப்பித்துச் செல்கிறாள் மாங்கனி. நெற்றி பிளந்து . போராடி ஓடும்போது பள்ளமொன்றில் விழுந்து விடுகின்றாள் போகுமளவிற்குக் காயமுறுகிறாள் ஆனாலும் கற்பை இழக்காதவளாகப் . இதனை .பெருமிதம் கொள்கிறாள்,

தாசி மகள் என்றாலும் கற்புக் காக்கும்
தமிழ்மகள் சேரமகள் மூர்ச்சையாக

என்று கவிஞர் தமிழ்ப் பெண்களின் கற்பின் மேன்மையை உயர்வாகச் சுட்டுகிறார் மாங்கனியையும் மற்றும் நான்கு பெண்களையும் மலைமேனி ஆட்கள் சிறையிலிட்டுள்ளனர் நினைவு திரும்பிய மாங்கனி ., மற்ற நால்வரையும் பார்க்கிறாள்.

பெண்ணமுத நால்வரையுங் கண்டாள் ; வாயிற்
பேச்சின்றி முகம்பார்த்தாள் கற்பின் செல்வி

என்று பேச்சிழந்த நிலையிலும் தன்னைச் சார்ந்தவர்களைப் பார்த்து ஆறுதல்படும் மாங்கனியாகப் படைத்திருப்பதை அறியமுடிகிறது.

மலைமேனி எனும் மிருகத்திடமிருந்து மீட்டுத் தளிவேலன் என்னும் சேரநாட்டு வீரனிடம் அகப்படுகிறாள் மாங்கனி தளிவேலனும் மாங்கனியை வைத்துப் . பொன்னைப் பெற்றுவிட விரும்பி, 'சூரபதன்' என்பவனிடம் விற்று விடுகிறான் . கொலைகாரச் சூரபதன், 'என்ன கொடுமை செய்வானோ ?' என்று மாங்கனியும் ஏங்கி இருக்கிறாள்.

இதனை வெளிப்படுத்த விரும்பிய கவியரசு கண்ணதாசன்,

விலைமாது விலையானாள் ; வேங்கைவாயில்
கலைமானாய் அடைபட்டாள்; கற்பும் இந்நாள்;

என்று, மாங்கனியின் பாத்திரப் படைப்பைப் பேச நினைக்கும் போதெல்லாம், கற்பின் திறத்தைப் பற்றிப் பேசுவதைக் காணலாம் இவ்வாறு மாங்கனியில் . மகளிரின் கற்பு பற்றிய சிந்தனைகளைக் கவியரசு கண்ணதாசன் உரக்க வெளிப்படுத்திச் செல்வதைக் காணமுடிகிறது

**அலகு 2 : புதுக்கவிதை:**

நா.முத்துக்குமார் - பட்டாம் பூச்சிவிற்பவன் - நூலில் தூர் கவிதையில் பெண்ணடிமைத் தனத்தையும் ‘விமானம்’ கவிதையில் சிறுவயது ஏக்கத்தையும், ‘ஒரு கிராமத்து கிரிக்கெட்’ கவிதையில் கிராமத்தில் கிரிக்கெட் விளையாடிய அனுபவத்தையும் பற்றிப் பேசுகிறார். சூரியனைச் சுமப்பவர்கள் - இன்குலாப் இன்குலாப் சூரியனைச் சுமப்பவர்கள் கவிதை மூலம் ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்வாதாரத்தைப் பற்றி பேசுகிறார் மேலும் “போர் பந்தரிலிருந்து…..” கவிதையின் மூலம் விலைவாசி

உயர்வைப் பற்றி கூறுகிறார். ‘‘அந்த பம்பு செட்டை ரிப்பேர் செய்து விட்டார்களாம்’’ கவிதையில் மிராசு தாரரின் கிணற்றில் மிராசுதாரரின் குளிக்க வந்த தாழ்த்தப்பட்ட குழந்தைகளை மிராசுதாரர் மின்சாரம் பாய்ச்சி தீயில் கருக்கிய செய்திகளைப் பற்றி பேசுகிறார்.

**அலகு – 3 ஒரு சிறு இசை – வண்ணதாசன்**

வண்ணதாசன் ‘ஒரு தாமரைப் பூ, ‘ஒரு குளம்’ சிறுகதையில் பணி ஓய்வு பெற்றவர்களின் மனநிலையை படம்பிடித்துக் காட்டியுள்ளார். ‘‘எண்கள் தேவையற்ற உரையாடல்கள் சிறுகதையில் ஜான்சி, சோமு இருவரும் அலுவலகத்தில் ஒன்றாக பணிபுரிந்தவர்கள் சோமு இறந்ததை அறிந்து வரும் போது அவளுடைய எண்ணங்கள் ‘‘ அலுவலகத்தில் நடந்தது, வீட்டில் கல்யாண பத்திரிக்கை கொடுக்க வந்தது’’ போன்ற செய்திகளை பின்னோக்கு உத்தியில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**அலகு – 4 அகல் விளக்கு – மு.வரதராசன்**

அகல் விளக்கு என்பது மு.வரதராசன் இயற்றிய புதினமாகும். இரு நண்பர்களின் வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளின் மூலம் சமுதாய சிந்தனைகளை கூறியுள்ளார்.

சந்திரன் வேலய்யன் என்ற இரு நண்பர்களின் வாழ்க்கையைக் காட்டுகிறது. சந்திரன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறான். ஆனால் அவள் அவனை விட்டுப் பிரிந்து சென்று விடுகிறாள். ஆதலால் சந்திரனின் வாழ்க்கை கவலைக்கிடமாக மாறுகிறது. வேலய்யனுக்கு ஒரு நல் வாழ்க்கை கிடைக்கிறது. பின் அவன் சந்திரனைத் திருத்தத் முயல்கிறான். இறுதியில் சந்திரன் இறந்து விடுகிறான் இக்கதை இளைஞர்களுக்கு ஒரு பாடமாகவும் அமைகிறது.

**உயிர்நாரில் தொடுத்த மலர்கள்**

**அலகு – 5 குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்**

1. வாழ்க்கைக்கு வள்ளுவம்.

 ‘‘அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
 பகவன் முதற்றே உலகு’’ இறைவனுக்கு உலகுதான் உயிர். இறைவன் உலகை இயக்குகிறான் விவேகானந்தருக்கு இராம கிருஷ்ணர். இதயத்தில் இறை உணர்வை ஊட்டினார். நம்மில் இருக்கும் கெட்ட பண்புகளை விளக்கினால் இதயத்தில் இறைவனை உறையச் செய்யலாம்?
 வள்ளுவர், இறைவனுக்கு பின் வாள் சிறப்பைக் கூறி நீரின் தேவையை உணர்த்துகிறார். நீர் அமிழ்தத்திற்கு ஒப்பானது என்கிறார்.

இறைவனுக்கும், இயற்கைக்கும் பின் மனித புல மாண்பை விளக்குகிறார் சிகாகோ உரையாற்றி விவேகானந்தரின் மாண்பையும், சேதுபதி மன்னரின் மாண்பையும் காட்டுகிறார்.

யான் என்னும் செருக்க இல்லையேல் மனம் அன்பு மயமாகும். பகைவரையும் மன்னிக்கும் பண்பு அன்பில் உருவானது. பெரியபுராண மெய்பொருள் நாயனார் உதாரணம் மேலும் அன்பு பிரதிபலன் எதிர்பார்க்காது. அன்பு புகைப்படத்தையோ, நன்றியையோ எதிர்பார்க்காது.

அன்பின் வழியது பசிபிணி சுருக்கம் தன்மை கொல்லாமை.

அன்பால் ஒழுக்கமான வாழ்க்கை உருவாகும் கொல்லாமை மட்டுமின்றி பொய் சொல்லாமை, புறங்கூறாமை. நல்லோர் இறந்தாலும், வரலாறாய் வாழ்கிறார்கள். புத்தன், ஏசு, காந்தி, பூமியில் பிறந்தது….. தோழர் நமக்காக!

நல்ல தலைமுறை உருவாக திருக்குறள் அவசியம்

**வாழ்க்கைக்கு வள்ளுவம் - 2**

உலகத்தில் உறவுகள் அனைத்தும் நம்மை ஒதுக்கினாலும், நமக்கு துணை நிற்பது புத்தகங்களே! வாழ்க்கையின் துணையாக திருக்குறள் உள்ளது.

திருக்குறள் மனித வாழ்க்கைக்கு இறை நம்பிக்கையை வலியுறுத்துகிறது. நமது வாழ்கையில் புலன்களையும் பொறிகளையும் பக்குவப்படுத்த வேண்டும்.

‘‘ பொறி வாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்க

நெறி நின்றார் நீடு வாழ்வார்’’ இறைவாழ்க்கைக்கும் மனிததத்துவத்திற்கும் உள்ள உறவு பற்றி பேசுகிறது.

அலெக்ஸ்சாண்டரும், டயோஜனிசும் சந்திந்தப்போது உலகத்தை வென்றவனை விட தன்னை வென்றவனே தரணி ஆள முடியும் என்ற உண்மை வெளிப்படுகிறது.

இயற்கையை வழிபட வேண்டும் இறைவனாக பார்க்க வேண்டும். இயற்கையை வழிபட தவறினால் நமக்கு இழப்பு தான் இறைவனோடு இயற்கை இணைந்ததாலே மரங்களை போற்றத் தொடங்கினோம்.

மருதமரம் - முருகன் மதுரை கடம்பவனமாகயிருந்தது அந்தமரம் இன்று மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் தங்கப்பட்டையிட்டு காட்சிபொருளாய் உள்ளது.

இயற்கையை பேணாமையால் ஓசோன் ஓட்டை. பென்னிக்குவிக் இயற்கை வளமாம் நீர் நிலையைத் தேக்கி ‘‘செயற்களி செய்வார் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலாதார்’’ ஆனார்.

செயற்கரிய செயலைச் செய்து பெரியர் ஆன பென்னிகுவிக் கம்பம் பள்ளத்தாக்கில் முல்லை பெரியாறு எழுப்பி சாதித்துக் காட்டினார்.

**‘‘அறமெனப்பட்டது இல்வாழ்க்கை’’**

விலங்கினங்களிடமும் அன்பை காட்டும் சங்க இலக்கியம் எட்டுத்தொகை பத்துப்பாட்டே சான்று. டெல்லா, ஜிம் கதை, சீதையின் கதை இல்வாழ்க்கையில் அன்பே உறுதியாயிருந்தது. டால்ஸ்டாய் மனைவி அன்னாகரீனாவின் சுயநலதன்மை இல்வாழ்க்கையில் பிரிவாய் அமைந்தது. அன்பு அறிவுடன் இணைந்ததாயிருத்தல் வேண்டும்.

**3.கண்ணோட்டம் காட்டும் கனிவு.**

கண்ணோட்டம் என்பது சிறந்த பண்பாடு ஒழுக்கம் கண்ணோட்டம் என்னும் ‘‘கழிபெருங்காரிகை’’

கண்ணோட்டம் என்பது அழகு. பொருந்திய பண்பு ஆள்வோருக்கு இன்றியமையாத பண்பு. உலகில் ஒருவரை ஒருவர் சார்ந்து இயங்க கண்ணோட்டம் அவசியம் என்கிறார் வள்ளுவர்.

கண்ணப்பர், அன்னை தெரசா இவர்கள் பரிவு காட்டும், அன்பு காட்டும் அருள் நெஞ்சங்கள் இந்த அன்பு கண்ணோட்டம், பாசக் கண்ணோட்டம், நேசக் கண்ணோட்டம், கருணை கண்ணோட்டம், அனைவருக்கும் தேவை.

**4. இயற்கை வேளாண்மை பேணுவோம்**

இயற்கை அழியவிடாமல் பாதுகாக்க வேண்டும் மனிதன் வாழ்வில் மரம் தொட்டில் தொடங்கி இடுகாடு வரை துணை நிற்கிறது. மனிதன் மரத்தை பாதுகாக்க மறந்தான் என வைரமுத்து பாடுகிறார்.

வேளாண்மையில் நச்சுத்தன்மை இல்லாத நிலை வேண்டும் மாசுபடுத்தாத உணவுப் பயிரை நச்சுப்படுத்தாத விவசாய வாழ்வை நோக்கப் பயணிப்போம்.

**5. நீரின்றி அமையாது உலகு**

நீர் தேக்க கண்மாய், குளம், குட்டை, நன்னீர் குளம். இவை வாழ்வாதாரத்திற்கு துணை நின்றன.

காந்திக்கிராமப்பல்கலைக்கழகம் துணைவேந்தர் கோ.இராமசாமி. சிவகங் கையில் பூமிக்கடியில் கடல் போல் நீர் ஓடியது என்கிறார்.

சிவகங்கை மாவட்டத்தில் நீர் நிலையை சேகரிக்க மன்னர்களும், நகரத்தாரும் கற்சுவர்களை அமைத்து நீரை பாதுகாத்தனர்.

**6. வாழ்க தொழில் கூட்டுறவு**

தொடக்க காலத்தில் கூட்டுறவு தொழில் ஜீவநாடியாயிருந்தது.

இயந்திர பெருக்கத்தால் இவை மறைந்து போகிறது. பெரிய தொழிற்சாலைகளிலும் கூட்டுறவு வளர வேண்டும்.

ஒருவரை ஒருவர் தாங்கியும், தழுவியும் வாழும் வாழ்க்கை கூட்டுறவு வாழக்கை.

**7. வாழ்க மானுடம்! வளர்க விஞ்ஞானம்!**

நான் யார்? என் உள்ளம் யார்? என்று ஆய்வினை நிகழ்த்தியது மெய்ஞ்ஞானம். காற்றை, மண்ணை, விண்ணை, நீரை, நெருப்பை ஆய்வு செய்தது விஞ்ஞானம்.

நியூட்டன் - ஆப்பிள் ஏன் கீழ விழுந்தது என்ற ஆய்வு. ஆர்க்கிமிடீஸ் - உலகம் உருண்டை என்ற கண்டுபிடிப்பு எடிசனின் மின் விளக்கு. ஸ்டீ்பன் ஹாசிங் உடல் முழுதும் செத்து சக்கரநாற்காலியில் அமர்ந்து உலகைதுல்லியமாக கணித்தார்.

இராமன் விளைவு மூலம் நோபல் பரிசை வென்றார் சர்.சி.வி.இராமன் எனவே மானுடத்தால் விஞ்ஞானத்தை வளர்க்க முடியும்.

**8. மனித முயற்சியின் பெருமை**

முயற்சியும், உழைப்பும் இல்லாத மனிதனுக்கு வாழ்க்கையும், இல்லை வளர்ச்சியும் இல்லை.

"உனக்கு வேண்டிய ரொட்டித் துண்டை வியர்வையால் தேடு" – கர்த்தர்

"உழைப்பின்றி உண்ணும் உணவு திருட்டுக்குச் சமம" - கிருஷ்ணர் "வறுமை - நோவு, - உழைப்பை கண்டவுடன் ஓடிவிடும்" – பாரதியார்.

தன் துன்பம் மறந்து மறைத்து சமூகத்தில் துன்பம் துடைப்பவர் வரலாற்றில் பேசப்படுவர் கையிழந்தவர்களின் கரவொலி, ஜப்பான் - ஹிரோஷிமா நாகசாகியின் உழைப்பு முன்னேற்ற தேசமானது.

**9. வாழ்வில் வெல்வோம்**

நாணமும், கல்வியும் நயத்தல் அரிது ஔவை

காற்றை முழுமையாய் ஏற்று வாழ வேண்டும். மகத்தான மனிதர்களின் வாழ்க்கை நமக்கு பல பாடங்களை கற்றுத்தருகிறது 1816 – முதல் போராடி 1860 – ல் அமெரிக்கக் குடியரசுத் தலைவரான ஆப்ரகாம் லிங்கன், பக்கத்து மாணவரைப் பார்த்து எழுதாத மகாத்மா மன்னிப்பு கேட்க மறுத்து மரணத்தை தழுவிய பகத்சிங், தனக்குத்தானே நற்சான்றிதழ் வழங்கிய முன்னால் பாரத பிரதமர் மொரார்ஜி தேசாய் முடியும் என மன ஒருமைப்பாடு வெற்றிக்கு இலக்கு என்றார் விவேகானந்தர்.

ஒழுக்கம், அன்பு நேர்மையால் வாழ்வில் வெற்றி பெறலாம்

**10. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்**

துன்பங்களை துவளச் செய்யும் வாழ்க்கை வாழ வேண்டும். நாம் உயிரோடு இருப்பது மட்டும் அல்ல வாழ்க்கை உயிர்ப்போடு இருப்பது தான் வாழ்க்கை.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப்படும்"

**11. இறைவன் தங்கும் ஆலயம்.**

இறைவன் தங்கும் ஆலயமாக இதயம் மாற அன்னை வளர்க்க வேண்டும். தன்னைப் போல் பிறரையும் நேசி – கிறிஸ்துவம்.

அன்பே சிவம் - இந்து மதம்,

பிறர் துன்பபடும் போது கடவுளிடம் பிராத்தனை செய்வதை விட அவனுக்காக உதவும் கரங்களே சிறந்தவை.

**12. சமயம் வளர்த்த தமிழ்.**

வாழ்வதற்கு பொருள் தேவை. நாம் வாழ்வதிலும் பொருள் தேவை. தமிழர் நாகரிகத்தையும் கலாச்சாரத்தையும் சமயக்குரவர்களால் பன்பாட்டையும் உயர்த்தி பிடித்த பெருமை பெண்களுக்கு உண்டு - நாயன்மார்களால் இதனை உணரலாம்.

**13. நான் மறைய வேண்டும். நாம் மலர வேண்டும்.**

இறை சிந்தனை மலர நான் ஆணவம் மறைய, நாம் சிந்தனை உயர வேண்டும்.

**14. திருவாசகம் ஓதுவோம்.**

திருவாசகத்திற்கு உருகார். ஒருவாசகத்திற்கும் உருகார்

**15. ஏழை பங்காளனைப் போற்றுவோம்.**

நாடாளும் பல்லவ மன்னன் கட்டிய கோயிலிலே எழுந்து அருள்பாலிக்காதவன். ஏழைப் பூசாரின் இதயக் கோயிலில் அமர்ந்து அருள்பாலித்தான் என் கடன் பணி செய்து கிடப்பவராய் அடியாளர்கள் இருந்தனர்.

**16. தஞ்சை பெரிய கோயில்**

தஞ்சை பெரிய கோயிலில் வழி இராஜராஜ சோழனின் சிறப்பை உணரலாம்.

**17. என்றும் வாழும் வீரமருது சகோதரர்கள்**

மண்ணைக் காத்த தன் இன்னுயிரை தியாகம் செய்தவர்கள்.

**18. அன்பால் இறைவனை வழிபடுவோம்**

அன்பால் மட்டும் இறைவனை அடைய முடியும் அன்பும் - சிவமும் இரண்டென்பார்… திருமூலர்.

**19. பிறர் நலனை பேணுதல் உண்மையான வழிபாடு.**

காசிக்கு போய் நீராடிவிட்டு பக்கத்து வீட்டுக்காரன் இன்னுமா சாகவில்லை என்பது ஆன்மீகம் இல்லை.

**20. அறிவு ஒளி ஏற்றுவோம்**

கல்லாமை இல்லா உலகம் வேண்டும் எனில் அறிவு ஒளியை ஏற்ற வேண்டும்.

**21. புதிய விடுதலையை நோக்கித் தேசம் பயணிக்கட்டும்**

சுப்ரமணிய சிவா, அவர்களின் உழைப்பு அளப்பற்கரியது. வறுமை, ஏழ்மை, இயலாமை தீண்டாமை இல்லா புதிய உலகம் படைப்போம்.

**22. தேசத்தின் சொத்து**

நம்பிக்கையே வாழ்க்கை நம்பிக்கை, உழைப்பு அர்ப்பணிப்பு உடைய இளைய தலைமுறையே தேசத்தின் சொத்து.

**23. நம் தேசத்தின் செல்வம்.**

முன்பு உறவால் சூழப்பட்ட குழந்தைகள் இன்று உறவின்றி தனிமரமாய் வளர்கிறது.

அன்பால் வளர வேண்டிய மழலைச் செல்வங்களை ஆயுதத்தால் அடித்து ஒரு போதும் வளர்க்காதீர் குழந்தைகள் நம் வீட்டுச் செல்வம் மட்டுமல்ல, நாட்டின் செல்வம் அவர்களைப் பேணி வளர்ப்போம்

**24. புதிய பாரதம் படைப்போம்.**

சாதிகள் இல்லா சமத்துவமான பாரதம் படைப்போம். சமத்துவம் வேண்டும். பாதகம் செய்யாத, படித்தவன் சூதும், வாதும் செய்யாத நல்ல மனிதர்களை உருவாக இளையதலைமுறையாய் அமைய வேண்டும்.

**25. இளைய பாரதம் விழித்து எழட்டும்**

நூறு இளைஞர்களால் உலகத்தை மாற்றமுடியும் என்றார் விவேகானந்தர். நான்வாழ்ந்தால் போதாது. நாம் வாழ வேண்டும்.

**26. உலகத்தின் ஓசைச் சுடர்ஒளி?**

உலகம் முழுவதும் ஆன்மீக சிந்தனையுடன் கூடிய அன்பு தேவை.

**27. எழுமின் விழிமின் !**

முக்தியை அடைய எல்லோரும் முயற்சிக்க வேண்டும்.

**28. இந்தியா உலகிற்கு அளிக்கும்**

வையகத்தில் அன்பிற்கு சிறந்த தவம் இல்லை

**29. மனிதர் குல மாணிக்கம்**

நேரு தன் வாழ்வை தேசத்திற்கு அர்பணித்தவர். குழந்தைகளின் சிரிப்பில் வாழ்கிறார். சிரிப்பொலியில் நிறைந்து நிற்கிறார்.

**30. நம்பிக்கையின் ஒளிக்கீற்று**

பெண்களின் முன்னேற்றம். நாட்டின் முன்னேற்றம்.

**31.32. அன்னை தெரசா, பெரியார் அவர்கள் நமக்கு கிடைத்த பொக்கிசம்** அன்பாலும் அடிமையில்லா வாழ்வாலும் வையகத்தை வாழ வழிகோலியவர்கள்.

**33. அவரே ஒரு பாடம்**

சேதுராமன் Be Science, Be honest he hard work. இவைகளை தாரகமாக கொண்டதால் அவரே ஒரு பாடமானார்.

**34.** உயிர் நாரில் கொடுத்த மாலையில் தன் வாழ்வை படம்

பிடித்துக் காட்டி. உலகிற்கு உறவான செய்தியை பகிர்ந்துள்ளார் நூல் ஆசிரியர் பொன்னம்பல அடிகளார்.